**முனைவர் ப.மகேஸ்வரி,**

**தமிழ்த்துறை,**

**உதவிப்பேராசிரியர்,**

**நிர்மலா மகளிர் கல்லூரி,**

**கோவை 18.**

**அலைபேசி எண் - 99527 05617.**

**Email ID : maheswarijoseph@gmail.com**

# புறநானூற்றில் தொன்மங்கள்

## முன்னுரை (ABSTRACT)

தொன்மங்கள் (Myth) தெய்வங்களைப் பற்றிய தொல் பழங்காலத்தைச் சேர்ந்த கதைகளாகும். இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் பலவற்றைக் கொண்டு இவ்வுலகம் மட்டுமல்லாமல் கீழ் உலகங்கள், மேல் உலகங்கள் என்று பலவற்றிற்கும் ஊடுருவிச் செல்லும் நிகழ்ச்சிகளைக் கொண்டவையாகும். அவையாவும் உண்மையென்றும், புனிதமென்றும் நம்பப்பட்டு வருகின்றன. **“**மேலை இலக்கியங்களுக்கெல்லாம் பைபிளே மூலத்தொன்மம் (Source Myth) என்றும் அதிலிருந்தே இலக்கிய கருக்களும், இலக்கிய வகைகளும், பாத்திரங்களும், நிகழ்ச்சிகளும் பெறப்பட்டன என்றும் நார்த்ராப்.ஃ.பிரை கூறுவார்**”**. சங்கப்பாடல்கள் பல தொன்மக்கருத்துகளைக் கொண்டுள்ளன. அவ்வகையில் தொன்மங்கள் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளமையைச் சுட்டுவதே இவண் நோக்கம்.

KEYWORDS: தொன்மம், அதன் பயன்பாடுகள், அமைப்புக்கூறு, தொன்ம உவமைகள், தொன்மப்பாத்திரங்கள்

## தொன்மப்பயன்பாடுகள்

இந்திய மொழி இலக்கியங்கள் இராமாயண, மகாபாரதத் தொன்மங்களைப் பயன்படுத்தியுள்ளன. இதில் வரும் மூலக்கதைகளையும், கிளைக்கதைகளையும் பலர் சொல்லியுள்ளனர். புலவர் குழந்தை இராவண காவியத்திலும், பாரதிதாசன் ‘‘இரணியன் அல்லது இணையற்ற வீரன்’’ எனும் நாடகத்திலும் இராமாயணத்தைத் தங்கள் கொள்கைகளுக்கேற்ப மீட்டுருவாக்கம் செய்துள்ளனர். ஜெயகாந்தன் தமது ‘‘சுந்தரகாண்டம்’’ எனும் நாவலில் சிறையிருந்த சீதையின் கதையை அமைப்புக்கூறாகப் (Structural element) பயன்படுத்தியுள்ளார்.

கல்கியின் ‘‘சிவகாமியின் சபதம்’’ எனும் வரலாற்று நாவலும், ‘‘அலை ஓசை’’ எனும் சமூக நாவலும் மேலெழுந்தவாரியான கதை அளவில் இராமாயணத்தை நினைவூட்டுகின்றன. வால்மீகியும், கம்பனும் கூறும் அகலிகை எனும் தொன்மத்தை மீட்டுருவாக்கம் செய்து கவிதை வடிவில் வெ.ப.சுப்ரமணிய முதலியார், ச.து.சு.யோகியார், பிச்சமூர்த்தி, ஞானி, மஹாகவி (ஈழம்),

சிற்பி, கம்பதாசன், வாலி, முருகுசுந்தரம் போன்றோரும், சிறுகதை வடிவில் புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன் போன்றோரும், இக்காலப் பின்னணியோடு நாவல் வடிவில் விந்தன், பாலகுமாரன் போன்றோரும், சிறுகதைை வடிவில் சி.என்.எம்.ஆதவன் போன்றோரும் தொன்மங்களைப் பயன்படுத்தியுள்ளனர். புறநானூற்றுப்புலவர்கள் தம் பாடல்களில் தொன்மங்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

## தொன்மங்களிலிருந்து பெறப்பட்ட உவமைகள்

தொன்மங்களிலிருந்து அரிய உவமைகளைப் பெறுதல் புறநானூற்றுக் கவிஞர்களுக்குக் கைவந்த கலையாக இருக்கிறது. பாண்டியன் நன்மாறனை மருதனிளநாகனார் உயர்ந்த மலையாகிய பெரிய வில்லுக்குப் பாம்பாகிய நாண் கொண்டு ஒப்பில்லாத ஓர் அம்பை வாங்கி மூன்று மதில்களையும் எய்து வலியையுடைய தேவர்க்கு வெற்றியைக் கொடுத்த கரியநிறம் சேர்ந்த திருமிடற்றையுடைய இறைவனுடைய நெற்றியில் விளங்கும் ஒரு கண்ணைப் போல மூவேந்தருள்ளும் மேம்பட்டவன் பாண்டியன் என்றும், அவன் மற்ற இருவரிலும் சிறப்புக்குரியவன் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனை

**“ஓங்கு மலைப் பெருவில் பாம்புஞாண் கொளீஇ ….**

**பிறை நுதல் விளங்கும் ஒரு கண் போல**

**வேந்து மேம்பட்ட பூந்தார் மாற!”** (புறநா. 55)

பாண்டியன் நன்மாறனையே நக்கீரர் தமது புறநானூறு 56 ஆவது பாடலில் நன்மாறன் நான்கு தேவர்களை நான்கு கூறுகளில் ஒத்திருப்பதை

**“ஏற்றுவலன் உயரிய எரி மருள் அவிர் சடை…..**

**புகழ் ஒத்தீயே முன்னியது முடித்தலின்**

**ஆங்கு ஆங்கு அவர் ஒத்தலின், யாங்கும்**

**அரியவும் உளவோ நினக்கே?”**

என்று இயம்பியுள்ளார்.

## ஔவையார் பாடல்களில் தொன்மம்

அதியமானை ஔவையார் மிகப் பொருத்தமான தொன்ம உவமைகளைக் கையாண்டு புகழ்ந்துள்ளார். இறைவன் நஞ்சினைத் தானுண்டு அமிழ்தை விண்ணோர்க்கு வழங்கியது போன்று அதியமானும் நெல்லிக்கனியைத் தான் உண்ணாது ஔவைக்கு ஈந்ததால் அதற்குக் காரணமாகிய நஞ்சுண்டும் சிவன் நிலைபெற்றிருந்தாற்போல் அவனும் நீடுவாழவேண்டுமென்று வாழ்த்துவார். இதனை

**“வலம்படு வாய்வாள் ஏந்தி, ஒன்னார் …..**

**நீலமணி மிடற்று ஒருவன் போல**

**மன்னுக பெரும நீயே…”** (புறநா.91)

என்ற பாடல் விளக்குகிறது. பக்தியிலக்கியங்களில் இடம்பெற்றுள்ள இறைவனாகிய சிவபெருமான் போல நீண்டகாலம் நிலைபெற்று வாழவேண்டும் என்று வாழ்த்தியதால் இது தொன்மத்தை உணர்த்தும் பாடலாகும்.

## ஊன்பொதி பசுங்குடையார் பாடல்களில் தொன்மம்

இராமாயண நிகழ்ச்சி ஒன்றை நகையுணர்வு மேலோங்கி நிற்க உவமையாக்கியுள்ளார் ஊன்பொதி பசுங்குடையார். வறுமையால் வருந்திய என் சுற்றத்தார் அவன் கொடுத்த அணிகளுள் விரலில் அணிவனவற்றைச் செவியிலும், செவிக்குரியவற்றை விரலிலும், இடைக்குரியவற்றைக் கழுத்திலும், கழுத்துக்குரியவற்றை இடையிலும் வகைதெரியாது அணிந்து, இராமனுடன் சென்ற சீதையை இராவணன் கவர்ந்து சென்றபோது சீதை கழற்றியெறிய நிலத்தே வீழ்ந்த அழகிய அணிகலன்களைக் கண்டெடுத்த குரங்கினுடைய சிவந்த முகத்தையுடைய மந்திகளாகிய பெரிய சுற்றம் அவற்றைத் தாம் அணிந்து கண்டோர் சிரித்து மகிழ்ந்தாற் போன்ற தோற்றம் அளித்தனர் என்று சொல்லும் புலவர் கூற்றில் உவமையணி பெரும் சிறப்புறுகிறது என்பதில் ஐயமில்லை. இதனை

**"இலம்பாடு உழந்த தன் தலையே..."** (புறநா.378)

## முரஞ்சியூர் முடிநாகனார் பாடல்களில் தொன்மம்

பாரதப்போரில் ஈடுபட்டிருந்த இரு படையினருக்கும் உணவளித்த பெருமையுடையான் என்று பெருஞ்சோற்றுதியஞ்சேரலாதன் என்னும் மன்னனைப் புகழ்கின்றார் புலவர். இதனை

**"அலங்குளைப் புரவி ஐவரொடு சினைஇ**

**நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை**

**ஈரைப்பதின்மரும் பொருது களத் தொழியப்**

**பேருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"** (புறநா.2)

இருபடைகளுக்கும் வரையாது வழங்கினோய் என்று புலவரால் புகழப்படும் சிறப்பு இம்மன்னனுக்குரியதென்பதை வேறு நூல்களிலிருந்தும் அறியமுடிகிறது.

அசையும் தலையாட்டமணிந்த குதிரையை உடைய பாண்டவர் ஐவருடனே சினந்து நிலத்தைத் தம்மிடத்தே கொண்ட பொற்பூந்தும்பையை உடைய துரியோதனன் முதலாகிய நூற்றுவரும் பொருது போர்க்களத்தில் மடியும் வரையில் பெருஞ்சோறாகிய மிக்க உணவை இரு படைகளுக்கும் வழங்கினான் என்பதை

**"முதியர்ப் பேணிய வுதியஞ்சேரல், பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை"** (அகநா. 238: 8 – 9) என அகநானூறும், **"பெருஞ்சோறு பயந்த திருந்துவேல் தடக்கை"** (சிலப்.23 : 55) எனச் சிலப்பதிகாரமும், **"ஓரைவர் ஈரைம்பதின்மருடன்று எழுந்த போரில் பெருஞ்சோறு போற்றாது தானளித்த சேரன்"** (சிலப்.29: ஊசல்வரி) எனச் சிலப்பதிகாரமும் பதிவுசெய்துள்ளன.

## எமன் எனும் தொன்மப்பாத்திரங்கள்

இறப்பை "எமன்" என்னும் தொன்மப்பாத்திரத்தின் கொடுஞ்செயலாக்கிப் பார்க்கும் பாடல்கள் பல புறநானூற்றில் உண்டு.

**"அட்டகுழிசி அழல் பயந்தா அங்கு**

**அளியர் தாமே ஆர்க என்னா**

**அறனில் கூற்றம் திறன் இன்று துணிய….."** (புறநா.237)

வெளிமான் எனும் வள்ளலைக் காண்பதற்குப் பெருஞ்சித்திரனார் சென்றபொழுது அவன் இறந்ததால் எமனைக் கண்ணோட்டமில்லாதவன் என்று அழைத்துத் தமது ஆறாத்துயரத்திற்கு அமைதி காண்கிறார்.

வன்பரணர் பாடிய முதுபாலைத் துறை பாடல் ஒன்று தலைவனை இழந்த தலைவி துயர்பொறாது கூற்றுவனைச் சபிப்பதாக உள்ளது. இதனை

**"ஐயோ! எனின் யான் புலி அஞ்சுவலே…**

**இன்னாது உற்ற அறனில் கூற்றே"** (புறநா.255)

எனும் அடிகள் உணர்த்துகின்றன.

என்னைப்போல் எமன் பெருவிதிர்ப்பு உறுவானாக என்று கணவனின் உடலை வைத்துக் கொண்டு செயலிழந்து வாடும் தலைவி கூறும் அவலத்தின் உச்சமாக

**"ஐயோவென்று கதறுவேனாயின் அதனால் புலிவந்து ஏதம் …**

**கூற்றம் என்னைப் போல் பெரிய நடுக்கத்தை உறுவதாக"**

என்ற பாடல் அமைந்துள்ளது.

அதியமான் தகடூர் பொருதுவீழ்ந்த எழினியை அரிசில்கிழார் எமனை வறுமையில் உழலும் உழவனாகக் காட்டுகின்றார். இதனை

**"நோய் உழந்து வைகிய உலகினும், மிக நனி …..**

**வீழ் குடி உழவன் வித்து உண்டா …"** (புறநா.230)

என்ற பாடல் விளக்குகிறது.

இதே உத்தியில் புறநானூற்று 227 ஆம் பாடலில் கிள்ளிவளவனை மாசாத்தனார் பாடும் பாடலும் அமைந்துள்ளது.

**"கார் எதிர் உருமின் உரறிக் கல்லென…"** என்ற புறநானூற்று 361 ஆம் பாடல் ஒரு தலைவனுக்கு நிலையாமையை உணர்த்த எமனை முன்னிறுத்துவதாக அமைந்துள்ளது.

பாண்டியன் நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் பாடிய பாடலில் கூற்றம் நாணிக் கண்ணோகும் அரிய காட்சி அங்கதச்சுவை பெற்றுத் திகழ்கிறது.

**“அம்புசென்று இறுத்த அரும்புகள் யானைத்...**

**கூற்றுக் கண்ணோடிய வெருவரு பறந்தலை”** (புறநா.19)

என்று உறவினரை இழந்த மறக்குடி மகளிரின் பெருமிதம் பேசப்படுகிறது.

கோப்பெருஞ்சோழனின் நடுகல் கண்டு பொத்தியார் பாடும் (புறநா.221) பாடலில் கூற்றத்தின் கொடுமையைக் கண்டிக்க புலவர்களை அணிசேர அழைக்கும் புதுமையைக் காணமுடிகிறது.

அதியமான் நெடுமானஞ்சி பொருது புண்பட்டு நின்றபோது அவனை ஔவையார் பாடிய பாடல் போர்க்களத்து மாளும் வீரர் விண்ணுலகெய்துவர் என்கிறது புறநானூறு 93 ஆம் பாடல். இதனைக்

**“குழவி யிறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**

**ஆண் அன்றென்று வாளில் தப்பார்”** (புறநா.74)

என்ற அடிகளை விளக்கும்போதும் உரையாசிரியர்கள் சொல்வர். ‘‘மூப்பினும் பிணியினும் இறவாது அமர்க்களத்து வீழ்ந்தோரே துறக்கம் பெறுவர்’’ என்பது நச்சினார்க்கினியர் கூற்று.

**“தவத்துறை மக்கள் மிகப் பெருஞ்செல்வர்**

**ஈற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்**

**முதியோர் என்னான் இளையோர் என்னான்**

**கொடுந்தொழிலாளன் கொன்றனன் குவிப்ப”**

என்று கூற்றத்தைச் சாடுகின்றது மணிமேகலை.

இறப்பைப் புறநானூற்றுப் புலவர்கள் கூற்றமெனும் பேராற்றலைக் கண்டு பேசியிருப்பது போல் எமனைப் பற்றிய புராணக்கதைகளுக்கெல்லாம் வழிவகுத்திருக்க வேண்டும்.

## முடிவுரை

இவ்வாறாகப் புறநானூற்றுப் பாடல்களில் தொன்மப்பயன்பாடுகள், தொன்மங்கள் உவமைகளாக இடம்பெற்றுள்ளவிதம் முதலியன சொல்லப்பட்டுள்ளன.

## துணைநின்ற நூற்கள்


1. புதுப்பார்வைகளில் புறநானூறு – ப.மருதநாயகம்
2. புறநானூறு – பகுதி 1 - உரைவேந்தர் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை
3. புறநானூறும் தமிழ்ச்சமுதாயமும் - புலியூர்க்கேசிகன்
4. சங்ககாலச்சமுதாயம் - கா.சுப்பிரமணியன்